ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2142/75 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27
*2142/75 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1051/12 மற்றும் 1998, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை விலை மதிப்புத் திணைக்களத்தின் இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அவ்வப்போது அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு இணங்க, மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பாதிப்பில்லாதவாறு கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை விலை மதிப்புத் திணைக்களத்தின் இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவைக்கான பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம்.ஏ.பீ. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
1200/09, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 27.

1A - G 31130 - 27 (2019/09)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**01. பிரமாணக் குறிப்பின் பெயர் மற்றும் நடைமுறைக்கு வரும் திகதி :**

இந்த இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பு .................. ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

**02. நியமன அதிகாரி :-**

நிறைவேற்றுத்தர வகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்:- அரசாங்க சேவை ஆணைக்குழு

உதவி விலை மதிப்பீட்டாளர் (வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி 2) : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்படும் பிரதான விலை மதிப்பீட்டாளர்.

**03. சேவை வகை / சேவை வகைகள்:-**

| | | | |
|---|---|---|---|
| I | சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் | - | விசேட தரம் |
| II | நிறைவேற்றுத் தரம் | - | தரம் I |
| | | | தரம் II |
| | | | தரம் III |
| III | வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி | - | தரம் 2 - I |
| | | | தரம் II |

**04. பொறுப்பளிக்கப்படும் பணிகள் தொடர்பான பொதுவான வரைவிலக்கணம்:-**

நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத பணிகளுக்காக அனைத்து அரசாங்க ஆதனங்கள் மற்றும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படும் ஆதனங்களை விலைமதிப்பீடு செய்தல் உள்ளிட்ட அரசாங்க மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், நியதிச்சட்ட சபைகள் உள்ளிட்ட அரச சார்பு நிறுவனங்களுக்கு விலை மதிப்பீடு செய்தல் மற்றும் ஆதன முகாமைத்துவம் தொடர்பில் அறிவுரை வழங்குதல்.

**05. சம்பளம்:-**

5.1 சம்பளக் குறியீட்டு இல.

| | |
|---|---|
| சிரேஷ்ட நிறைவேற்றுத்தரம் | - SL – 3- 2016 |
| நிறைவேற்றுத் தரம் | - SL – 1- 2016 |
| வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி 2 | – MN – 5- 2016 |

**5.2** சம்பள அளவுத்திட்டம்

| | |
|---|---|
| சிரேஷ்ட நிறைவேற்றுத்தரம் | - ரூ. 88,000- 12 x 2,700 – ரூ. 1,20,400 |
| நிறைவேற்றுத் தரம் | - ரூ. 47,615- 10 x 1,335-8 x 1,630-17 x 2,170 – ரூ. 1,10,895 |
| வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி 2 | - ரூ.34,605 -10x660 -11x755 - 15x930 - ரூ. 63,460 |

5.3 தர முறைமைக்கு இணங்க ஆரம்பச் சம்பளப் படிமுறை மற்றும் சம்பள நிலை

| சேவை வகை | ஆரம்பச் சம்பளப் படிமுறை | ஆரம்பச் சம்பள நிலை (ரூ) |
|---|---|---|
| விசேட தரம் | படிமுறை 1 (SL-3-2016 ) | 88,000.00 |
| வகுப்பு1தரம் 1 | படிமுறை 20 (SL-1-2016) | 76,175.00 |
| வகுப்பு 1 தரம் II | படிமுறை 12 (SL-1-2016) | 62,595.00 |
| வகுப்பு 1 தரம் III | படிமுறை 1 (SL-1-2016) | 47,615.00 |
| வகுப்பு II தரம் I | படிமுறை 12 (MN-5-2016 ) | 41,960.00 |
| வகுப்பு II தரம் II | படிமுறை 1 (MN-5-2016) | 34,605.00 |

**06. சேவைக்குரிய பதவிகள் :**

6.1 அனுமதியளிக்கப்பட்ட பதவிப் பெயர்கள், அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை மற்றும் தரங்கள் :

| அனுமதியளிக்கப்பட்ட பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை | பதவிகள் அனுமதிக்கப் பட்டுள்ள வகுப்பு / தரம் | வகிபாகம் |
|---|---|---|---|
| பிரதான விலை மதிப்பீட்டாளர் (சிரேஷ்ட நிறைவேற்றுத்தரம்) | 01 | விசேட | சேவை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களின் நியதிச் சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத பணிகளுக்கான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆதன விலை மதிப்பீடு மற்றும் ஆதன முகாமைத்துவ விடயங்கள் தொடர்பில் அறிவுரை வழங்குதல், நிறுவனத் தலைவர் என்ற வகையில் தாபன மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய விலை மதிப்புத் திணைக்களத்தின் முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் அதிகாரங்கள் மற்றும் பணிகளை பகிர்ந்தளித்தல் மற்றும் அதற்குரிய திணைக்களத்தின் மொத்தப் பணிகளையும் மேற்பார்வை செய்தல். சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அறிவுரை வழங்குதல், சுற்றறிக்கைகளை வெளியிடல் மற்றும் தொழிற்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |

| அனுமதியளிக்கப் பட்ட பதவிகள் | அனுமதிக்கப் பட்ட பதவி எண்ணிக்கை | பதவிகள் அனுமதிக்கப் பட்டுள்ள வகுப்பு / தரம் | வகிபாகம் |
|---|---|---|---|
| மேலதிக பிரதான விலை மதிப்பீட்டாளர் (சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம்) | 04 | விசேட | நியதிச் சட்ட மற்றும் நியதிச் சட்டம் அல்லாத பணிகளுக்கான சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களினால் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆதன விலைமதிப்பீடு மற்றும் ஆதன முகாமைத்துவ பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். பிரதான விலைமதிப் பீட்டாளரினால் ஒப்படைக்கப் படும் ஒவ்வொரு விடயத் துறைகளுக்குமான இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான வழிமுறைகள் மற்றும் திட்டங்களை அடையாளம் காணுதல், சந்தர்ப்பத்திற்கேற்ப தேவையான அறிவுரைகளை வழங்குதல் மற்றும் தொழில்துறை நடவடிக் கைகள். |
| பிரதி பிரதான விலை மதிப்பீட் டாளர் (நிறை வேற்றுத் தரம்) | 16 | வகுப்பு I தரம் I | நியதிச் சட்ட மற்றும் நியதிச் சட்டம் அல்லாத பணிகளுக்காக அனைத்து அரசாங்க மற்றும் ஏனைய ஆதனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்ட ஆதனங்களை விலைமதிப்புச் செய்தல் மற்றும் ஆதன முகாமைத்துவப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு விடயத் துறைகளின் கீழும் பொறுப்பளிக் கப்பட்ட இலக்குகளை வினைத் திறனுடன் பயனுள்ள முகாமைத் துவ கட்டமைப்பின் ஊடாக போட்டித் தன்மையுடன் செலவு உணர்வுடன் நிறைவேற்றிக்கொள் வதற்கு அடையாளம் காணப் பட்ட திட்டங்கள் மற்றும் வழி முறைகளை நடைமுறைப்படுத் தல், தொழிற்துறை நடவடிக்கைகள் மற்றும் காலத்திற்கேற்ற தொழிற்துறை நடவடிக்கைகளுக் கான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்தல். |

| அனுமதியளிக்கப் பட்ட பதவிகள் | அனுமதிக்கப்ப ட்ட பதவி எண்ணிக்கை | பதவிகள் அனுமதிக்கப் பட்டுள்ள வகுப்பு / தரம் | வகிபாகம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட விலை மதிப்பீட்டாளர் (நிறைவேற்றுத் தரம்) | 80 | வகுப்பு I<br>தரம் II | நியதிச் சட்ட மற்றும் நியதிச் சட்டம் அல்லாத பணிகளுக்காக அனைத்து அரசாங்க மற்றும் ஏனைய ஆதனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்ட ஆதனங்களை விலைமதிப்புச் செய்தல் மற்றும் ஆதன முகாமைத்துவப் பணி களை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு விடயத் துறைகளின் கீழும் பொறுப் பளிக்கப்பட்ட இலக்குகளை வினைத் திறனுடன் பயனுள்ள முகாமைத்துவ கட்டமைப்பின் ஊடாக போட்டித் தன்மையுடன் செலவு உணர்வுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு அடை யாளம் காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங் களை நடைமுறைப்படுத்தல், மேற் பார்வை செய்தல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் தொழிற்துறை நடவடிக்கைகள். |
| விலை மதிப்பீட்டாளர் (நிறைவேற்றுத் தரம்) | 120 | வகுப்பு I<br>தரம் III | நியதிச் சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத பணிகளுக்காக செய்யப் படும் விலைமதிப்பு நடவடிக்கை களுக்காக தகவல்களைச் சேகரித் தல், தகவல்களை பகுப்பாய்வு செய்தல், அறிக்கைகளைத் தயாரித் தல், ஆதன முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவப் பணி களை வினைத்தினுடன் மற்றும் பயனுள்ள வகையில் செலவு பற்றிய உணர்வுடன் நிறைவேற்று வதற்கு ஏற்புடைய கால அடிப் படையில் வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களை முறையாக நடை முறைப்படுத்தல். |
| உதவி விலை மதிப்பீட்டாளர் (வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2) | 360 | வகுப்பு II<br>தரம் I /<br>வகுப்பு II<br>தரம் II | நியதிச் சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத பணிகளுக்காக செய்யப்படும் விலைமதிப்பு நடவடிக்கைகளுக்காக தகவல்களைச் சேகரித்தல், தகவல் களை பகுப்பாய்வு செய்தல், விலைமதிப்பு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்களினால் ஒப்படைக் கப்படும் ஏனைய வெளிக்கள மற்றும் அலுவலக தொழிற்துறைப் பணிகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்ப டைக்கப்படும் பணிகள். |

**6.2 ஒருங்கிணைந்த அலுவலர் எண்ணிக்கை :**

| | | | |
|---|---|---|---|
| பிரதான விலை மதிப்பீட்டாளர் | - | 01 | 05 |
| மேலதிக பிரதான விலை மதிப்பீட்டாளர் | - | 04 | |
| பிரதி பிரதான விலை மதிப்பீட்டாளர் | - | 16 | 216 |
| சிரேஷ்ட விலை மதிப்பீட்டாளர் | - | 80 | |
| விலை மதிப்பீட்டாளர் | - | 120 | |
| உதவி விலை மதிப்பீட்டாளர் | - | 360 | 360 |

ஒரு தரத்திலிருந்து மற்றொரு தரத்திற்கு தரமுயர்வு வழங்கும் நோக்கத்திற்காக III, II மற்றும் I ஆகிய தரங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த அலுவலர் எண்ணிக்கைக்கு உரியதாகக் கருதப்படும்.

**6.3 பதவியின் / பதவிகளின் தன்மை :** நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது.
(ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்குக் கட்டுப்படுதல்)

**07.** ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வீதம் :-

7.1

| வகுப்பு மற்றும் தரம் | அடிப்படை | வீதம் |
|---|---|---|
| வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் II | திறந்த | 100% |
| | மட்டுப்படுத்தப்பட்ட | - |
| | திறமை | - |
| நிறைவேற்றுத்தர வகுதி இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு I தரம் III | திறந்த | 20% |
| | மட்டுப்படுத்தப்பட்ட | 20% |
| | திறமை | 60% |

7.2 திறந்த ஆட்சேர்ப்பு முறை - வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் II உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை

**7.2.1** ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் - வகுப்பு II தரம் II

**7.2.2** தகைமைகள்:-

**7.2.2.1** கல்வித் தகைமைகள் :-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆதன முகாமைத்துவம் மற்றும் விலை மதிப்பீடு தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய நில அளவை யாளர்களின் றோயல் நிறுவனத்தின் அங்கத்துவத்தைக் கொண்ட பட்டய விலைமதிப்பீட்டாளராக இருத்தல்.

7.2.2.2 தொழிற் தகைமைகள்:- ஏற்புடையதன்று

7.2.2.3 அனுபவம்:- ஏற்புடையதன்று

7.2.2.4 உடற்தகைமை :-

சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

7.2.2.5 ஏனைய தகைமைகள் :-

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

II சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் ;

III. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் உரிய வயதையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றவராக கருதப்படுவார்.

7.2.3 **வயது :-**

7.2.3.1 குறைந்தபட்ச வயதெல்லை **21** இற்கு குறையாத

7.2.3.2 உயர்ந்தபட்ச வயதெல்லை:**- 35** இற்கு மேற்படாத

7.2.4 **ஆட்சேர்ப்பு முறை :-**

எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும். போட்டிப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்க்க உத்தேசிக்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் சாதாரண நேர்முகப் பரீசிட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**7.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை** (பாடத்திட்டம் - பின்னிணைப்பு 06 இல் குறிப்பிடப் பட்டுள்ளது)

| பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| விடய அறிவு வினாப்பத்திரம் பகுதி I | 100 | 40 |
| விடய அறிவு வினாப்பத்திரம் பகுதி II | 100 | 40 |

**7.2.4.1.1 நடாத்தும் அதிகாரி** : பரீட்சை ஆணையாளர் நாயகம்

**7.2.4.2 தொழில் தேர்வு** :- ஏற்புடையதன்று

**7.2.4.3 சாதாரண நேர்முகப் பரீசிட்சை** :-
நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் - புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகள் மாத்திரம் பரிசோதிக்கப்படும்.

**7.2.4.3.1 சாதாரண நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி :-**
பிரதான விலைமதிப்பீட்டாளர்

**7.2.4.4 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை:-** ஏற்புடையதன்று.

**7.2.5 விண்ணப்பம் கோரும் முறை**:- அரசாங்க வர்த்தமானியில் அறிவித்தல்களைப் பிரசுரிப்பதன் மூலமும் பிரசித்திபெற்ற பத்திரிகைகளில் அறிவித்தல்களை பிரசுரிப்பதன் மூலமும் இணையத்தளத்தில் அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலமும் விண்ணப்பங்கள் கோரப்படும்.

**7.2.6 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு -** ஏற்புடையதன்று.

**7.2.7 திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு** - ஏற்புடையதன்று.

**7.3 திறந்த ஆட்சேர்ப்பு** - நிறைவேற்றுத்தர வகுதி வகுப்பு I தரம் III விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்க்கும் முறை

**7.3.1** ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் - நிறைவேற்றுத்தர வகுதி வகுப்பு I தரம் III

**7.3.2 தகைமைகள்**:-

**7.3.2.1 கல்வித் தகைமைகள் :-**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆதன முகாமைத்துவம் மற்றும் விலை மதிப்பீடு தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

ஐக்கிய இராச்சியத்தின் பட்டய நில அளவையாளர்களின் றோயல் நிறுவனத்தின் (பொதுப் பிரிவு) இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**7.3.2.2 தொழிற்தகைமை** :- ஏற்புடையதன்று

**7.3.2.3** அனுபவம்:- ஏற்புடையதன்று

**7.3.2.4 உடற்தகைமைகள் :-**
சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கான, பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல், உள ஆரோக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

7.3.2.5 ஏனைய தகைமைகள் :-

I. இலங்கைப் பிரசையாக இருத்தல்

II சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்

III. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் உரிய வயதையும் விண்ணப்பம் கோரும் அறிவித்த லில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றவராக கருதப்படுவார்.

**7.3.3 வயது**

7.3.3.1 குறைந்தபட்ச வயதெல்லை :- 21 இற்கு குறையாத

7.3.3.2 உயர்ந்தபட்ச வயதெல்லை :- 35 இற்கு மேற்படாத

**7.3.4 ஆட்சேர்ப்பு முறை :-**

எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் அடிப்படைத் தகைமையுள்ளவர்கள் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யபடுவர்.

| பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| விடய அறிவு வினாப்பத்திரம் (பல்தேர்வு வினாப் பத்திரம்) | 100 | 40 |
| விடய அறிவு வினாப்பத்திரம் (கட்டுரை வடிவத்திலான வினாப் பத்திரம்) | 100 | 40 |

7.3.4.1 **எழுத்துப் பரீட்சை** (பாடத்திட்டம் - பின்னிணைப்பு 07 இல் குறிப்பிடப் பட்டுள்ளது)

7.3.4.1.1 **நடாத்தும் அதிகாரி** : பரீட்சை ஆணையாளர் நாயகம்

7.3.4.2 **தொழில் தேர்வு** :- ஏற்புடையதன்று

**7.3.4.3 சாதாரண நேர்முகப் பரீட்சை :-**

நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் - புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகள் மாத்திரம் பரிசோதிக்கப்படும்.

*குறிப்பு.-* நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொள்ளும் திறமை ஒழுங்கு மற்றும் ஆட்சேர்க்க உத்தேசிக்கப்படும் எண்ணிக்கைக்கு அமைய நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

**7.3.4.3.1 சாதாரண நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி :**
அரசாங்க சேவை ஆணைக்குழு

**7.3.4.4 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை:-** ஏற்புடையதன்று.

**7.3.5 விண்ணப்பம் கோரும் முறை :-**
அரசாங்க வர்த்தமானியில் அறிவித்தல்களைப் பிரசுரிப்பதன் மூலமும் பிரசித்திபெற்ற பத்திரிகைகளில் அறிவித்தல்களைப் பிரசுரிப்பதன் மூலமும் இணையத்தளத்தில் அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலமும் விண்ணப்பங்கள் கோரப்படும்.

**7.4 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு:-** நிறைவேற்றுத்தர வகுதி இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவை வகுப்பு I தரம் III விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்க்கும் முறை

**7.4.1** ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் - நிறைவேற்றுத்தர வகை வகுப்பு I தரம் III

**7.4.2 தகைமைகள் :-**

**7.4.2.1 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :-**

**கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆதன முகாமைத்துவம் மற்றும் விலை மதிப்பீடு தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டத்துடன் உதவி விலைமதிப்பீட்டாளர் பதவியில் உள்ள உத்தியோகத்தர்கள்

அல்லது

ஐக்கிய இராச்சியத்தின் பட்டய நில அளவையாளர்களின் றோயல் நிறுவனத்தின் அங்கத்துவத்துவம் பெற்றுள்ள பட்டய விலைமதிப்பீட்டாளராக உதவி விலைமதிப்பீட்டாளர் பதவியிலுள்ள உத்தியோகத்தர்கள்.

**அனுபவம் :**

வகுப்பு II தரம் II இல் ஐந்து (05) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூரணப்படுத்தி இருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் ஐந்து (05) உழைத்திருத்தல் அல்லது வகுப்பு II தரம் I உதவி விலை மதிப்பீட்டாளராக இருத்தல்.

**7.4.2.2 தொழிற் தகைமைகள்:-** ஏற்புடையதன்று

**7.4.2.3 உடற்தகைமை:-**

இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**7.4.2.4 ஏனையவை:-**

I. உதவி விலைமதிப்பீட்டாளர் பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தரொருவராக இருத்தல்.

II உதவி விலைமதிப்பீட்டாளர் வகுப்பு II தரம் II இற்குரிய வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

III. விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் படும் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூரணப்படுத்தி இருத்தல்.

IV உடன் முன்னரான 05 வருட காலப் பகுதிக்குள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாமலிருத்தல்.

V பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் உரிய வயதையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றவராக கருதப்படுவார்.

**7.4.3 வயது** :- ஏற்புடையதன்று

**7.4.4 ஆட்சேர்ப்பு முறை :-**

எழுத்துமூலப் பரீட்சையொன்றின் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**7.4.4.1 எழுத்துமூலப் பரீட்சை** (பாடத்திட்டம் - பின்னிணைப்பு 08 இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

| பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| விடய அறிவு வினாப்பத்திரம் (பல்தேர்வு) | 100 | 50 |
| விடய அறிவு வினாப்பத்திரம் (கட்டுரை) | 100 | 50 |

**7.4.4.1.1 நடாத்தும் அதிகாரி** :
பரீட்சை ஆணையாளர் நாயகம்

**7.4.4.2 தொழில் தேர்வு**:- ஏற்புடையதன்று

**7.4.4.3 சாதாரண நேர்முகப் பரீட்சை** :- ஏற்புடையதன்று

**7.4.4.4 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :-**
மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட திறமைக்கு அமைய எழுத்துமூலப் பரீட்சையை நடாத்தும் அதிகாரியினால் பெற்றுக் கொண்ட அகராதி ஒழுங்கு முறையிலான பெயர் பட்டியலுக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்ற இரண்டு மடங்கு விண்ணப்ப தாரிகள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அடிப்படைத் தகைமைகளும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | அதிகபட்சப் புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 35 | ஏற்புடையதன்று |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 25 | |
| மேலதிக அனுபவம் | 25 | |
| ஏனைய தகைமைகள் | 10 | |
| நேர்முகப் பரீட்சையின்போது காட்டும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

குறிப்பு :-

1. ஆட்சேர்ப்பு செய்யும் போது மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகளுக்கு ஒதுக்கியுள்ள அதிகபட்ச புள்ளிகளை உள்ளடக்கிய விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும். அந்த விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டத்தை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்ளடக்கி வெளியிடுதல் வேண்டும்.
2. எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கு மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.
3. எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபைக்கு வழங்கப்படமாட்டாது.

**7.4.4.4.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் அதிகாரி** :
அரசாங்க சேவை ஆணைக்குழு

**7.4.5 விண்ணப்பம் கோரும் முறை :-**

அரசாங்க வர்த்தமானியில் அறிவித்தல்களைப் பிரசுரிப்பதன் மூலமும் பிரசித்திபெற்ற பத்திரிகைகளில் அறிவித்தல்களை பிரசுரிப்பதன் மூலமும் இணையத்தளத்தில் அறிவித்தல்களைவெளியிடுவதன் மூலமும் விண்ணப்பங்கள் கோரப்படும்.

**7.5 சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

7.5.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் - நிறைவேற்றுத்தர வகை வகுப்பு I தரம் III

**7.5.2 தகைமைகள் :-**

I. வகுப்பு II தரம் I உதவி விலைமதிப்பீட்டாளராக இருத்தல்.

II வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி 2 க்குரிய வகுப்பு II தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந் திருத்தல்.

III. விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூரணப்படுத்தி இருத்தல்.

IV விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட காலப் பகுதிக்குள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாமலிருத்தல்

**7.5.3 வயது** :- ஏற்புடையதன்று

**7.5.4 ஆட்சேர்ப்பு முறை :-**

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**7.5.4.1 எழுத்துமூலப் பரீட்சை :-** ஏற்புடையதன்று

**7.5.4.2 தொழில் தேர்வு** :- ஏற்புடையதன்று

**7.5.4.3 சாதாரண நேர்முகப் பரீட்சை** :- ஏற்புடையதன்று

**7.5.4.4 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை:-**

வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கிற்கு குறையாத, விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் உத்தியோகத்தர்கள் அவர்களது சேவைமூப்புக்கு அமைய தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அடிப்படைத் தகைமைகளும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது பரிசோதிக்கப்படும்.

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள்** | **அதிகபட்சப் புள்ளிகள்** | **தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள்** |
|---|---|---|
| சேவைமூப்பு | 60 | ஏற்புடையதன்று |
| திறமை | 30 | |
| நேர்முகப் பரீட்சை சபை | 10 | |

குறிப்பு :-

1. ஆட்சேர்ப்பு செய்யும் போது மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகளுக்கு ஒதுக்கியுள்ள அதிகபட்ச புள்ளிகளை உள்ளடக்கிய விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும். அந்த விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டத்தை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்ளடக்கி வெளியிடுதல் வேண்டும்.

2. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கு மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**7.5.4.4.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி :**

அரசாங்க சேவை ஆணைக்குழு

**7.5.5 விண்ணப்பம் கோரும் முறை :-**

அரசாங்க வர்த்தமானியில் அறிவித்தல்களைப் பிரசுரிப்பதன் மூலமும் பிரசித்திபெற்ற பத்திரிகைகளில் அறிவித்தல்களை பிரசுரிப்பதன் மூலமும் இணையத்தளத்தில் அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலமும் விண்ணப்பங்கள் கோரப்படும்.

**08. வினைத்திறன்காண் தடைதாண்டல் :-**

**8.1**

| **வினைத்திறன்காண் தடைதாண்டல்** | **வினைத் திறன்காண் தாண்டலில் சித்தியடைய வேண்டிய காலப் பகுதி** | **வினைத்திறன்காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துப் பரீட்சை/ தொழில் தேர்வு/ சான்றிதழ் பாடநெறி/ வேறு** |
|---|---|---|
| வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 | | |
| 1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் | வகுப்பு II தரம் II க்கு ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சித்தியடைய வேண்டும். | பின்னிணைப்பு 01 |
| 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் | வகுப்பு II தரம் I தரமுயர்வு பெற்று ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சித்தியடைய வேண்டும். | பின்னிணைப்பு 02 |
| நிறைவேற்றுத்தர வகுதி | | |
| 1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் | வகுப்பு 1 தரம் III ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சித்தியடைய வேண்டும். | பின்னிணைப்பு 03 |
| 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் | வகுப்பு 1 தரம் II தரமுயர்வு பெற்று மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சித்தியடைய வேண்டும். | பின்னிணைப்பு 04 |
| 3 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் | வகுப்பு1 தரம் I தரமுயர்வு பெற்று ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சித்தியடைய வேண்டும். | பின்னிணைப்பு 05 |

**குறிப்பு:-** இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதிக்கு முன்னர் அமுலில் இருந்த சேவைப் பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளின் கீழ் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளில் சித்தியடையவேண்டியிருந்து ஏற்புடைய காலப் பகுதியில் அவ்வாறு சித்தியடைய தவறிய உத்தியோகத்தர்கள் அமுலில் இருந்த சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டலின் பாடங்களை ஒத்த இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பாடங்களை சித்தியடைவதன் மூலம் வினைத்திறன்காண் தடைதாண்டலை பூரணப்படுத்த முடியும். ஒத்த பாடங்கள் பின்னிணைப்பு 09 இல் உள்ளது.

**8.2 வினைத்திறன்காண் தடைதாண்டல் நடாத்தப்படும் கால இடைவெளி**

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் வருடத்திற்கு இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

**8.3 வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்தும் அதிகாரிகள்:**

வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 உதவி விலைமதிப்பீட்டாளர்களுக்கான

1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்
2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் } பிரதான விலை மதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றினால்

நிறைவேற்றுத்தர வகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான

1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்
2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்
3 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் } பிரதான விலை மதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றினால்

9. மொழித் தேர்ச்சி :

| மொழி | பெறவேண்டிய தேர்ச்சி |
|---|---|
| 1. **அரசகரும மொழி** | அரச கரும மொழியல்லாத மொழியொன்றில் சேவையில் நியமனம் பெற்ற அலுவலர்கள் தகுதிகூர்நிலைக் காலப்பகுதியில் உரிய மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 2. **மற்றைய அரச கருமமொழி** | அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கும் இணங்க வெளிக்கள/ அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 மற்றும் நிறைவேற்றுத்தர வகுதிக்குரிய ஏற்புடைய மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

10. தரமுயர்வுகள் :

10.1 வெளிக்கள/ அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 - வகுப்பு II தரம் II உதவி விலைமதிப்பீட்டாளர்களை வகுப்பு II தரம் I உதவி விலைமதிப்பீட்டாளர் பதவிக்கு தரம் உயர்த்தல்.

**10.1.1 சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில்**

10.1.1.1 பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் :-

( I ) சேவையில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

( II ) வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 - வகுப்பு II தரம் II இல் குறைந்தது பத்து(10) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் பத்து(10) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்.

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தரமுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

(iv) தரமுயர்வுத் தகுதி பெறுவதற்கு உடன்முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

( V ) வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி II இற்கு ஏற்புடைய மட்டத்தில் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

( VI ) திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

வெளிக்கள / அலுவலக உத்தியோகத்தர் வகுதி II இன் முதலாவது வினைத்

**10.1.2** தரமுயர்வு வழங்கும் முறை.-

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்கள் உதவி விலை மதிப்பீட்டாளர் வகுப்பு II தரம் I இற்கு பதவி உயர்வுக்கு நியமன அதிகாரியிடம் ஏற்புடைய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய கோரிக்கை விடுக்குமிடத்து நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் II தரம் I இற்கு தரமுயர்வு வழங்கப்படும்.

**10.2** நிறைவேற்றுத்தர வகுதி வகுப்பு I தரம்III உத்தியோகத்தர்களை வகுப்பு I தரம் II இற்கு தரமுயர்த்துதல்.

**10.2.1** சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில்

**10.2.1.1** பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:-

( I ) பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

( II ) பதவி உயர்வுக்காக நிறைவேற்றுத்தர வகுதி வகுப்பு I தரம் III இல் குறைந்தது பத்து (10) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகர மானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் பத்து (10) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்.

( III ) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தரமுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

( IV ) தரமுயர்வுத் தகுதி பெறுவதற்கு உடன்முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

( V ) நிறைவேற்றுத்தர வகுதிக்கு ஏற்புடைய மட்டத்தில் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

( VI ) நிறைவேற்றுத்தர வகுதிக்கு ஏற்புடைய முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.2.1.2 தரமுயர்வு வழங்கும் முறை:-

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களை வகுப்பு I தரம் II இற்கு பதவி உயர்வுக்கு நியமன அதிகாரியிடம் ஏற்புடைய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய கோரிக்கை விடுக்குமிடத்து நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரமுயர்வு வழங்கப்படும்.

10.3 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுதியின் வகுப்பு I தரம் II உத்தியோகத்தர்களை வகுப்பு I தரம்I இற்கு தரமுயர்வு வழங்குதல்.

10.3.1 **சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில்**

10.3.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:-

( I ) நிறைவேற்றுத்தர வகுதி வகுப்பு I தரம் II இல் குறைந்தது ஏழு (07) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் ஏழு(07) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்.

( II ) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தரமுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான ஏழு (07) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

( III) நிறைவேற்றுத்தர வகுதிக்கு ஏற்புடைய வகுப்பு I தரம் II இற்குரிய முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

( IV) தரமுயர்வுத் தகுதி பெறுவதற்கு உடன்முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

( V) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஆதன நிர்வாகம் அல்லது விலைமதிப்பீடு தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய நில அளவையாளர்களின் றோயல் நிறுவனத்தின் ஆதன முகாமைத்துவம் பற்றிய பட்டப் பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

10.3.1.2 தரமுயர்வு வழங்கும் முறை:-

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களுக்கு வகுப்பு I தரம் I இற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக நியமன அதிகாரியிடம் ஏற்புடைய உத்தியோ கத்தரினால் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய கோரிக்கை விடுக்குமிடத்து நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரமுயர்வு வழங்கப்படும்.

குறிப்பு:

உரிய திகதியில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையத் தவறும் உத்தியோகத்தரின் பதவி உயர்வுத் திகதி வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய தாமதித்த காலப் பகுதிக்கு சமமான காலத்தினால் தாமதப்படுத்தப்படும்.

10.4 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுதியின் வகுப்பு I தரம் I உத்தியோகத்தர்களை சிரேஷ்ட நிறைவேற்றுத்தர வகுதியின் விசேட தரத்திற்கு தரமுயர்வு வழங்குதல்.

10.4.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:-

( I ) பதவி உயர்வுக்கு தகைமைபெறும் உத்தியோகத்தர்கள்

நிறைவேற்றுத்தர வகுதி வகுப்பு I தரம் I உத்தியோகத்தராக ஐந்து (05) வருட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் வகுப்பு I தரம் I இற்கு பதவி உயர்வு பெற்ற பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

( II ) பதவி உயர்வுக்கு தகைமை பெறும் திகதிக்கு இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுதியில் 18 வருடங்களுக்கு குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல்.

( III) பதவி உயர்வுக்கு தகைமைப் பெறும் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட காலத்திற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் மற்றும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

குறிப்பு:-

வகுப்பு I தரம் I இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் 10.3.1.1(V) இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்யாத உத்தியோகத்தர்கள் அல்லது 10.3.1.1(V) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்யாத வகுப்பு 1 தரம் 1 இற்கு பதவி உயர்வு பெறும் உத்தியோகத்தர்கள் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமை பெறுவதற்கு 10.3.1.1(V) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

10.4.2 பதவி உயர்வு வழங்கும் முறை:-

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்கள் விசேட தரத்திற்கான பதவி உயர்வுக்காக நியமன அதிகாரியிடம் ஏற்புடைய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய கோரிக்கை விடுக்குமிடத்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அந்த உத்தியோகத்தரின் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய பதவி உயர்வு வழங்கப்படுவர்.

வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கிற்கு குறையாத விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் உத்தியோகத்தர்களிலிருந்து அவர்களது சேவை மூப்புக்கு அமைய தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அடிப்படைத் தகைமைகளும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது பரிசோதிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | அதிகபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை | தெரிவு செய்வதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| சேவைமூப்பு | 60 | ஏற்புடையதன்று |
| திறமை | 30 | |
| நேர்முகப் பரீட்சையில் வழங்கப்படும் புள்ளிகள் | 10 | |

திறமைக்கு வழங்கப்படும் புள்ளிகள் மேலதிக கல்வித் தகைமைகள், மேலதிக தொழில் தகைமைகள் மற்றும் துறைக்கு ஏற்புடைய முன்வைப்புக்களுக்கு வழங்கப்படும்.

குறிப்பு :-

1. ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகளில் உள்ளடக்கப்பட்ட விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும். அத்தோடு விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டத்தை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்ளடக்கி வெளியிடப்படும்.
2. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கு மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றுக்கு அமைய பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

11. பதவிகளுக்கு நியமித்தல்:-

<table>
<tr><th>பதவி</th><th>தகைமைகள்</th><th>தெரிவு செய்யப்படும் முறை</th></tr>
<tr><td>பிரதான விலை மதிப்பீட்டாளர்</td><td></td><td>அமைச்சரவையினால் நியமிக்கப்படுவார்.</td></tr>
<tr><td>மேலதிக பிரதான விலை மதிப்பீட்டாளர்</td><td>விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.</td><td>இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் விசேட தரத்தின் உத்தியோகத்தர்களில் சேவைமூப்பு மற்றும் திறமையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுவர்.</td></tr>
<tr><td>பிரதி பிரதான விலை மதிப்பீட்டாளர்</td><td>வகுப்பு I தரம் I உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.</td><td>வகுப்பு I தரம் I உத்தியோகத்தர்களில் திறமை மற்றும் சேவைமூப்புக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும். (சேவைமூப்பு 80% திறமை 20%)
<table>
<tr><th>புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்</th><th>புள்ளிகள்</th></tr>
<tr><td>மேலதிக கல்வித் தகைமைகள்</td><td>05</td></tr>
<tr><td>மேலதிக தொழில் தகைமைகள்</td><td>05</td></tr>
<tr><td>துறைக்கு ஏற்புடைய முன்வைப்புக்கள்</td><td>05</td></tr>
<tr><td>நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை</td><td>05</td></tr>
</table></td></tr>
<tr><td>சிரேஷ்ட விலை மதிப்பீட்டாளர்</td><td>வகுப்பு I தரம் I / வகுப்பு I தரம் II உத்தியோகத்தரொருவராக இருத்தல் வேண்டும்.</td><td>வகுப்பு I தரம் I / வகுப்பு I தரம் II உத்தியோகத்தர்களில் இருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர்.</td></tr>
</table>

**12. சேவைக்கு ஏற்புடைய நிபந்தனைகள் :-**

**12.1 நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனைகள் :-**

இது இலங்கை விலைமதிப்புத் திணைக்களத்திற்கு வரையறுக்கப்பட்ட சேவையொன்றாகும். ஆயினும், திணைக்களத்திற்குள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்பட முடியும். இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வெளிக்கள / அலுவலக வகுதி - 2 இன் கீழ் இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்கப்பட்ட உதவி விலைமதிப்பீட்டாளர்கள் மற்றும் இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர சேவை வகுதியின் கீழ் இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவை வகுப்பு I தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விலை மதிப்பீட்டாளர்கள் மூன்று வருட தகுதிகூர்நிலைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவதோடு நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் வகுதி வகுப்பு I தரம் III விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட, சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒரு வருட பதில் கடமை காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவர். அந்தக் காலப்பகுதியில் வேலை, வரவு, நடத்தை என்பன திருப்திகரமான மட்டத்திற்கு மேல் இருத்தல் மற்றும் ஏற்புடைய சட்டமுறையான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் உரிய பதவியில் நிரந்தமாக்கப்படுவர்.

**12.2 பயிற்சி மற்றும் அபிவிருத்தி :-**

பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீடுகளின் தரம் மற்றும் பயிற்சி தொடர்பில் அரசாங்க சேவையினுள் காணப்படும் சந்தர்ப்பங்களுக்கு அமைய உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி கடமைக்கு தடை ஏற்படாத வண்ணம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**13. பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணங்கள்:-**

I. “வர்த்தமானப் பத்திரிகை” என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை எனப் பொருள்படும்.

II. “சேவைப் பிரமாணக் குறிப்பு” என்பது, இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

III. “சேவை” என்பது, இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவை எனப் பொருள்படும்.

IV. “செயலாளர்” என்பது, நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

V. “செயலூக்கமிக்க சேவைக் காலம்” என்பது, சம்பளமற்ற லீவுக் காலப்பகுதிகள் உள்ளடக்கப்படாத ஆயினும் அமைச்சரவையினால் கொள்கை ரீதியில் செயலுக்கமுள்ள லீவுக் காலப்பகுதியாக கணிக்கப்பட வேண்டுமென விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக் காலப்பகுதிகளும் உள்ளடங்கலாக தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று சேவையில் ஈடுபட்ட சேவைக் காலத்தைக் குறிக்கும்.

**14. சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை புதிய தரமுறைக்கு உள்ளீர்ப்புச் செய்தல்.**

14.1 இந்த நடவடிக்கை முறை அமுல்படுத்தப்படும் திகதிக்கு சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். உரிய திகதிக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள MN 5-2006- A சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் அனைத்து உத்தியோகத்தர்களும் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பின்வருமாறு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

அந்தந்த பதவிகளுக்கு நியமிக்கப்படும் திகதிகளின் அடிப்படையில் சேவைக் காலம் கணக்கிடப்படும். ஆயினும், உள்ளீர்ப்பு காரணமாக ஏற்புடைய ஆட்களின் சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் நிகழாது அந்தத் திகதி உள்ளீர்ப்புக்கு முன்னரான சம்பள ஏற்றத் திகதியாக மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறே, சம்பள மாற்றுகையின் போது ஏற்புடைய ஆள் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பள படிமுறை புதிய சம்பள படிமுறையை ஒத்ததாக இருக்கும் காரணத்தினால் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவுக்கு அமைய அடுத்துவரும் மேல் சம்பளப் படிமுறையில் அமர்த்தலும் ஆகாது.

(i) வகுப்பு II தரம் II இற்கு

(அ) வகுப்பு III தரம் II உதவி மாவட்ட விலைமதிப்பீட்டாளர் பதவியில் ஆகக் குறைந்தது 10 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள்.

(ஆ) வகுப்பு III தரம் II உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் பதவியில்ஆகக் குறைந்தது 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள போதிலும் அமுலில் இருந்த சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய வகுப்பு III தரம் I இற்கு பதவி உயர்வுக்கு தகமைப்பெறாத உத்தியோகத்தர்கள், உதவி விலை மதிப்பீட்டாளர் வகுப்பு II தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(ii) **வகுப்பு II தரம் I** இற்கு

(அ) வகுப்பு III தரம் II உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் பதவியில் ஆகக் குறைந்தது 10 வருட சேவைக் காலத்தை பூரணப்படுத்தியுள்ள அத்தோடு ஏற்புடைய காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 10 சம்பள ஏற்றங்ளை உழைத்துள்ள மற்றும் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் அமுலில் இருந்த சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய வகுப்பு III தரம் I இற்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள்.

(ஆ) வகுப்பு III தரம் I உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் பதவியில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள்.
உதவி விலைமதிப்பீட்டாளர் வகுப்பு II தரம் I இற்கு உள்ளீர்ப்புச் செய்யப் படுவர்.

(iii) SL-1

(அ) இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலாகும் திகதிக்கு சேவையின் SL-1 சம்பளக் குறியீட்டின் கீழ் வகுப்பு II தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்கள் சேவையின் வகுப்பு I தரம் III இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(ஆ) இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலாகும் திகதிக்கு சேவையின் SL-1 சம்பளக் குறியீட்டின் கீழ் வகுப்பு II தரம் I இல் உள்ள உத்தியோக்தர்கள் சேவையின் வகுப்பு I தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(இ) இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலாகும் திகதிக்கு சேவையின் SL-1 சம்பளக் குறியீட்டின் கீழ் வகுப்பு I தரம் II இல் உள்ள உத்தியோக்தர்கள் சேவையின் வகுப்பு I தரம் I உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(iv) **SL-03**

(அ) இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலாகும் திகதிக்கு சேவை SL-3 சம்பளக் குறியீட்டின் கீழ் வகுப்பு I தரம் I இல் உள்ள உத்தியோக்தர்கள் சேவையின் விசேட தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

குறிப்பு I:

உள்ளீர்ப்பு ஏற்பாடுகளின் கீழ் ஒவ்வொரு தரங்களுக்கும் உள்ளீர்ப்புச் செய்வதற்கு தேவையான சேவைக் காலத்திற்கு மேலதிகமாக, மேலதிக செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் உள்ளீர்ப்புச் செய்யப்படும் தரத்தின் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலமாக கருதப்படும்.

குறிப்பு II:

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இல DMS/1166/III மற்றும் 2017.05.17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணிக்கான புதிய பதவிப் பெயர்கள், தரங்கள் மற்றும் பதவிகளின் எண்ணிக்கைக்கு அமைய முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்பட்ட / வழங்கப்படும் உத்தியோகத்தர்கள், அவர்கள் பதவி உயர்வு பெற்ற தரத்திற்கே உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

குறிப்பு III:

ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மேற்படி 14.1 (i), (ii),iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பொருந்தும்.

**15. இடைக்கால ஏற்பாடுகள்** – சேவைப் பிரமாணக் குறிப்பு அமுல்படுத்தப்படும் திகதிக்கு நிறைவு செய்யப்படாத, முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் பொருட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ள செயற்பாடுகள், முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**16. வேறு ;-**

(i) சகல நியமனங்கள் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இல. 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் பொருந்தும்.

(ii) இந்தப் பிரமாணக் குறிப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

பின்னிணைப்பு 01

**இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வெளிக்கள / அலுவலக வகுதி - 2 சேவை வகையின் வகுப்பு II தரம் II உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

01. பரீட்சை பற்றிய விபரம்

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| பகுதி I (செயல்முறைப் பரீட்சை) தன்மை அறிக்கையொன்றை தயாரித்தல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| பகுதி II (செயல்முறைப் பரீட்சை) வரிப்பண விலை மதிப்பு | 06 மணித்தியாலங்கள் | 100 | 40 |

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி (பிரதான விலைமதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம்)

03. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை வருடத்திற்கு இரு முறை நடாத்தப்படும்.

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| பகுதி I - தன்மை அறிக்கைகளை தயாரித்தல் (செயல்முறைப் பரீட்சை) | வழங்கப்படும் ஆதனமொன்று தொடர்பில் குறித்துரைக் கப்பட்ட காலப் பகுதியில் தன்மை அறிக்கையொன்றை தயாரித்தல். |
| பகுதி II - ( செயல்முறைப் பரீட்சை) வரிப்பண விலை மதிப்பு | ஆதன அலகுகளை அடையாளம் காணும் செயன்முறை, ஆதன நில அளவை, திட்ட வரைபடங்களை வரைதல் மற்றும் இலக்கமிடல் உள்ளிட்ட அதனுடன் தொடர் புடைய அலுவலக நடவடிக்கைகள். |

பின்னிணைப்பு - 02

**இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வெளிக்கள / அலுவலக வகுதி - 2 சேவை வகையின் வகுப்பு II தரம் I உத்தியோகத்தர்களுக்கான 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

01. பரீட்சை பற்றிய விபரம்

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| பகுதி I<br>(அ) நிர்வாகம் மற்றும் நிதி<br>(ஆ) திணைக்கள அமைப்பு மற்றும் நிர்வாகம்<br>(இ) மூலதன விலை மதிப்பு | 2 மணித்தியாலங்கள்<br>2 மணித்தியாலங்கள்<br>3 மணித்தியாலங்கள் | 100<br>100<br>100 | 40<br>40<br>40 |
| பகுதி II<br>(அ) தரப்படும் ஆதனமொன்று தொடர்பில் குறித்துரைக் கப்பட்ட செயற்பாடு களுக்கு விரிவான விலை மதிப்பு அறிக்கை யொன்றைத் தயாரித்தல். | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி (பிரதான விலைமதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவன மொன்றின் மூலம்)

03. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை வருடத்திற்கு இரு முறை நடாத்தப்படும்.

04. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| பகுதி I<br>(அ) நிர்வாகம் மற்றும் நிதி | தாபன விதிக் கோவையின் II, III, IV, XI, XII, XIV, XIX, XXV, XXVI, XXVII, அத்தியாயங்கள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள், 2" 124, 125, 126, 127, 128, 135, 136, 137, 138, 139. |
| (ஆ) திணைக்கள அமைப்பு மற்றும் நிர்வாகம் | திணைக்கள அமைப்பின் கட்டமைப்பு, அதிகாரம் வழங்குதல் மற்றும் திணைக்களக் கட்டளைகள் மற்றும் அலுவலக முறைமைகள் |
| (இ) மூலதன விலை மதிப்பு | பல்வேறுபட்ட ஆதனங்களுக்கான வகையீட்டு முறைமை, கட்டாய எடுத்தல், மதிப்பீட்டு விற்பனை/ கொள்வனவு மற்றும் வரித் தேவைகளுக்காக விலை மதிப்பு முறைகள் |
| பகுதி II<br>(அ) தரப்படும் ஆதமொன்று தொடர்பில் குறித்து ரைக்கப்பட்ட ஒரு பணிக்கான விரிவான விலைமதிப்பு அறிக்கை யொன்றைத் தயாரித்தல். | அறிக்கைகளை தயாரிக்கின்ற போது வழங்கப்படும் அறிவுறுத்தல் களுக்கு அமைய அபேட்சகரினால் தரப்பட்டுள்ள தரவுகளை பகுப்பாய்வு செய்து தேவையான மேலதிக தரவுகளை அனுமா னித்து ஆதனத்தின் விலைமதிப்பு பெறுமதியை முன்மொழிவது எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு விலைமதிப்பு பெறுமதியின் உண்மைத் தன்மை முக்கியமெனக் கருதாத போதிலும் ஏற்புடைய சட்ட வரையறைக்குள் பகுப்பாய்வு மற்றும் முறையான செயன் முறையொன்றைப் பயன்படுத்துவது முக்கியமெனக் கருதப்படு கின்றது. |

பின்னிணைப்பு **03**

**இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுதியின்**
**வகுப்பு I தரம் III உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

01. பரீட்சை பற்றிய விபரம்

| **வினாப்பத்திரம்** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்** |
|---|---|---|---|
| <u>பகுதி I</u><br>(அ) அரசாங்கத்துறை நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை செயன்முறை<br>(ஆ) நிர்வாகம் | பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு II தரம் II உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு ஏற்புடைய இந்தப் பாடங்களுக்கு இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவை வகுப்பு I தரம் III உத்தியோகத்தர்கள் தோற்றுதல் வேண்டுமென்பதோடு, அந்தப் பரீட்சைக்குரிய காலம் மற்றும் சித்தியடைய வேண்டிய புள்ளிகளின் அளவு என்பன இந்த உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையதாகும். விண்ணப்பதாரிகள் ஒரு தடவைக்கு ஒரு பாடம் வீதம் அல்லது ஒரே முறையில் இரண்டு (02) பாடங்களுக்கும் தோற்ற முடியும். | | |
| <u>பகுதி II</u><br>(அ) பிரயோக விலைமதிப்பீடு<br>(ஆ) விலை மதிப்பீட்டு அலகு முகாமைத்துவம் | 3 மணி.<br>3 மணி. | 100<br>100 | 50<br>50 |

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி :

பகுதி I - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்

பகுதி II - பிரதான விலைமதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம்

03. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை வருடத்திற்கு இரு முறை நடாத்தப்படும்.

04. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| பகுதி I<br>(அ) அரசாங்கத்துறை நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை செயன்முறை<br><br>(ஆ) நிர்வாகம் | பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் இலங்கை நிர்வாக சேவை தரம் III உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடத்திட்டம் இதற்கு ஏற்புடையதாகும். |
| பகுதி II<br>(அ) பிரயோக விலைமதிப்பீடு | பயன்பாட்டிலுள்ள விலைமதிப்பு முறைகள் மற்றும் கோட்பாடுகள், நியதிச் சட்ட விலைமதிப்பு, காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் விலைமதிப்பு போன்றன. கமத்தொழில் மற்றும் கனிய வளங்களை விலைமதிப்புச் செய்தல், ஆதனங்கள் மற்றும் நன்மதிப்பை விலைமதிப்பிடல். |
| (ஆ) விலை மதிப்பீட்டு அலகு முகாமைத்துவம் | விலை மதிப்பு அலகுகளை முகாமை செய்வது தொடர்பில் உள்ள திணைக்களக் கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளை பயன்படுத்தல், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் உதவி உத்தியோகத்தர்களின் கடமைகள், பிரிவின் முன்னேற்ற நிர்வாகம், மாகாண விலை மதிப்பீட்டாளருடன் பேண வேண்டிய உறவு, நிதி நிர்வாகத்தின் போது அதிகாரங்களை கையளித்தல், விலைமதிப்பு பிரிவின் நிறுவன நடவடிக்கைகள் பிரிவின் பாதுகாப்பு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை முறை, |

பின்னிணைப்பு **04**

**இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுதியின்**
**வகுப்பு I தரம் II உத்தியோகத்தர்களுக்கான 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

01. பரீட்சை பற்றிய விபரம்

| **வினாப்பத்திரம்** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்** |
|---|---|---|---|
| <u>பகுதி 1</u><br>(அ) உயர் விலை மதிப்பீடு | 3 மணி. | 100 | 50 |

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி :- பிரதான விலைமதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம்)

03. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை வருடத்திற்கு இரு முறை நடாத்தப்படும்.

04. பரீட்சைக்கான பாடத்திட்டம் : -

| **வினாப்பத்திரத்தின் பெயர்** | **பாடத்திட்டம்** |
|---|---|
| <u>பகுதி II</u><br>(அ) உயர் விலை மதிப்பு | 1. விமான நிலையங்கள், கோல்ப் மைதானங்கள், மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள இடங்கள், பொழுதுபோக்கு அரங்குகள் மற்றும் களியாட்ட நிலையங்கள், கடைத் தொகுதிகள், தங்குமிட வசதிகள் உள்ள ஹோட்டல்கள், பொதுமக்கள் பயன்பாட்டு ஆதனங்கள் மற்றும் கூட்டு ஆதனங்கள் போன்ற விசேட ஆதனங்கள் தொடர் பிலான மூலதன மற்றும் வரிப்பண நடவடிக்கைகளுக்காக விலைமதிப்புச் செய்தல் மற்றும் கனிய வளங்கள் உள்ள காணிகளை விலைமதிப்புச் செய்வதற்கு பாதிப்புச் செலுத்தும் கோட்பாடுகள்<br><br>2. விலை மதிப்புக்குத் தேவையான மாற்றங்களுடன் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.<br><br>3. விலைமதிப்பு முறைகளுக்கு பல்வேறுபட்ட பொருளியல் கோட்பாடுகள் மற்றும் சித்தாந்தங்களை பயன்படுத்துதல், குறைந்த தகவல்களைக் கொண்ட சந்தையில் விலைமதிப்புச் செய்தல்.<br><br>4. இந்த வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களையும் விலை மதிப்பீடு தொடர்பிலான பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். |

பின்னிணைப்பு **05**

**இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுதியின்
வகுப்பு I தரம் I உத்தியோகத்தர்களுக்கான 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

01. பரீட்சை பற்றிய விபரம்

பிரதான விலை மதிப்பீட்டாளரால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் ஆற்றல் விருத்தி மட்டம் - 1- பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் பெற்றுக்கொள்வதன் மூலம் மூன்றாவது (03) வினைத்திறன்காண் தடைதாண்டல் தேவைப்பாடுகள் பூரணப்படுத்தப் படுகின்றன.

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி :- பிரதான விலைமதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம்

03. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை வருடத்திற்கு இரு முறை நடாத்தப்படும்.

04. பரீட்சைக்கான பாடத்திட்டம் : ஏற்புடையதன்று

குறிப்பு: தரம் 1 இல் 05 வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தையும் சம்பள ஏற்றங்கள் 05 க்கு மேல் உழைத்துள்ள உத்தியோகத்தர்கள் மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

உள்ளீர்ப்புச் செய்யப்படும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் இந்தச் சேவைப் பிரமாணக் குறிப்பு அனுமதிக்கப்படும் திகதி முதல் 05 வருட நிவாரண காலம் வழங்கப்படும்.

பின்னிணைப்பு 06

## இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வெளிக்கள / அலுவலக வகுதி - 2 சேவை வகையின் வகுப்பு II தரம் II உதவி விலைமதிப்பீட்டாளர்ளை ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சையின் நுழைவுப் பரீட்சை

01. பரீட்சை பற்றிய விபரம்

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| ( I ) வினாப் பத்திரம் | 30 நிமிடங்கள் | 100 | 40 |
| ( II ) வினாப் பத்திரம் | 1½ மணித்தியாலம் | 100 | 40 |

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

03. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| ( I ) ஆவது வினாப்பத்திரம் | ஆதனக் கட்டுப்பாடு மற்றும் விலைமதிப்புக் கலை தொடர்பிலான விஞ்ஞானமாணி பட்டப் படிப்புக்காக கற்கும் பாடங்களுக்கு ஏற்புடையவாறு 25 வினாக்களுக்கு மேற்படாத வகையிலான பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். |
| ( II ) ஆவது வினாப்பத்திரம் | ஆதனக் கட்டுப்பாடு மற்றும் விலைமதிப்பு கலை தொடர்பிலான விஞ்ஞானமாணி பட்டப் படிப்புக்காக கற்கும் பாடத் துறைகளுக்கு ஏற்புடைய தலைப்புக்களை உள்ளடக்கி தயாரிக்கப்படும் கட்டுரை மற்றும் கட்டமைக்கப்பட்ட வடிவிலான வினாக்கள் உள்ளடக் கப்படும். |

பின்னிணைப்பு **07**

**இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுப்பு I தரம் III உதவி விலைமதிப்பீட்டாளர்ளை ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை**

01. பரீட்சை பற்றிய விபரம் -

| **வினாப் பத்திரம்** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்** |
|---|---|---|---|
| விடய அறிவு வினாப்பத்திரம் (பல்தேர்வு வினாப்பத்திரம்) | 30 நிமிடங்கள் | 100 | 40 |
| விடய அறிவு வினாப்பத்திரம் (கட்டுரை வடிவிலான வினாப்பத்திரம்) | **02** மணித்தியாலங்கள் | 100 | 40 |

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

03. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| **வினாப்பத்திரத்தின் பெயர்** | **பாடத்திட்டம்** |
|---|---|
| விடய அறிவு வினாப்பத்திரம் (பல்தேர்வு வினாப்பத்திரம்) | ஆதனக் கட்டுப்பாடு மற்றும் விலைமதிப்பீட்டுக் கலை தொடர்பிலான விஞ்ஞானமாணி பட்டப் படிப்புக்காக கற்பிக்கப் படும் பாடங்களுக்கு ஏற்புடையவாறு 25 வினாக்களுக்கு மேற்படாத வகையிலான பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். |
| விடய அறிவு வினாப்பத்திரம் (கட்டுரை வடிவிலான வினாப்பத்திரம்) | ஆதன விலை மதிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் சம்பந்தமான விசேட காணிப் பொருளியல், ஆதனச் சந்தை மற்றும் முதலீட்டுச் சந்தை ஊடாக தயாரிக்கப்படும் தலைப்புக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கட்டுரை மற்றும் கட்டமைக்கப் பட்ட வடிவிலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டு இந்த விடயத் துறைகள் தொடர்பில் அபேட்சகரின் பரந்த அறிவு இதன் மூலம் பரீட்சிக்கப்படும். |

பின்னிணைப்பு **08**

**இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வெளிக்கள / அலுவலக வகுதி - 2 சேவை உதவி விலைமதிப்பீட்டாளர்களை இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் நிறைவேற்றுத்தர வகுதியின் வகுப்பு I தரம் III விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

01. பரீட்சை பற்றிய விபரம் -

| **வினாப் பத்திரம்** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்** |
|---|---|---|---|
| விடய அறிவு வினாப்பத்திரம் (பல்தேர்வு வினாப்பத்திரம்) | 01 மணித்தியாலம் | 100 | 50 |
| விடய அறிவு வினாப்பத்திரம் (கட்டுரை வடிவிலான வினாப்பத்திரம்) | 02 மணித்தியாலங்கள் | 100 | 50 |

02. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

03. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| **வினாப்பத்திரத்தின் பெயர்** | **பாடத்திட்டம்** |
|---|---|
| விடய அறிவு வினாப்பத்திரம் (பல்தேர்வு வினாப்பத்திரம்) | ஆதனக் கட்டுப்பாடு மற்றும் விலைமதிப்பீட்டுக் கலை தொடர்பிலான விஞ்ஞானமாணி பட்டப் படிப்புக்காக கற்பிக்கப் படும் பாடங்களுக்கு ஏற்புடையவாறு 50 வினாக்களுக்கு மேற்படாத வகையிலான பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். |
| விடய அறிவு வினாப்பத்திரம் (கட்டுரை வடிவிலான வினாப் பத்திரம்) | அபேட்சகரின் அனுபவம், விலைமதிப்பு கோட்பாடுகள், சட்ட முறையான ஒதுக்கீடுகள் மற்றும் கட்டளைகள் பற்றிய அறிவு மற்றும் ஆதனம், சந்தை, நகர நிர்மாணம் மற்றும் காணிப் பொருளியல் பற்றிய அறிவை பரிசோதித்துப் பார்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரம். |

பின்னிணைப்பு 09

**ஒவ்வொரு சேவைப் பிரமாணங்களின் கீழும் நேரொத்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள்**

| | | |
|---|---|---|
| | 1998.10.29 ஆம் திகதிய இல. 1051/12 எனும் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 2000.11.06 ஆம் திகதிய மற்றும் 1157/04 எனும் வர்த்தமானப் பத்திரிகை மற்றும் இல. 1499/5 மற்றும் 2007.05.28 ஆம் திகதிய வர்த்மானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்பு | இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு |
| 01 | வெளிக்கள / அலுவலக வகுதி - 2 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு III தரம் II | வெளிக்கள / அலுவலக வகுதி - 2 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் II |
| | தன்மை அறிக்கைகளை தயாரித்தல்<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை | தன்மை அறிக்கைகளை தயாரித்தல்<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை |
| | வரிப்பண விலை மதிப்பீடு<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை | வரிப்பண விலை மதிப்பீடு<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை |
| 02 | வெளிக்கள / அலுவலக வகுதி - 2 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு III தரம் I | வெளிக்கள / அலுவலக வகுதி - 2 இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் I |
| | நிர்வாகம் மற்றும் நிதி<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை | நிர்வாகம் மற்றும் நிதி<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை |
| | திணைக்கள கட்டமைப்பு மற்றும் நிர்வாகம்<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை | திணைக்கள கட்டமைப்பு மற்றும் நிர்வாகம்<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை |
| | மூலதன விலைமதிப்பு<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை | மூலதன விலைமதிப்பு<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை |
| | வழங்கப்படும் ஆதனம் தொடர்பில் குறித்துரைக் கப்பட்ட பணிகளுக்காக விரிவான விலை மதிப்பு அறிக்கையொன்றை தயாரித்தல். 2 ஆவது வினைத்திறன்காண் தடை | வழங்கப்படும் ஆதனம் தொடர்பில் குறித் துரைக்கப்பட்ட பணிகளுக்காக விரிவான விலைமதிப்பு அறிக்கையொன்றை தயாரித்தல் 2 ஆவது வினைத்திறன்காண் தடை |
| 03 | நிறைவேற்றுத்தர வகுதி<br>இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் III | நிறைவேற்றுத்தர வகுதி<br>இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு I தரம் III |
| | கணக்கீட்டு முறைகள்<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை | அரசாங்க துறையில் நிதி முகமைத்துவம் மற்றும் பெறுகை நடவடிக்கை 1 ஆவது வினைத்திறன்காண் தடை |
| | நிர்வாகம்<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை | நிர்வாகம்<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை |
| | பிரயோக விலைமதிப்பீடு<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை | பிரயோக விலைமதிப்பீடு<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை |
| | விலைமதிப்பு அலகு முகாமைத்துவம்<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை | விலைமதிப்பு அலகு முகாமைத்துவம்<br>1 ஆவது வினைத்திறன்காண் தடை |

| | | |
|---|---|---|
| 04 | **நிறைவேற்றுத் தர வகுதி இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் II** | **நிறைவேற்றுத் தர வகுதி இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு II தரம் II** |
| | உயர் விலைமதிப்பீடு<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை | உயர் விலைமதிப்பீடு<br>2 ஆவது வினைத்திறன்காண் தடை |
| 05 | **நிறைவேற்றுத் தர வகுதி இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு I தரம் II** | **நிறைவேற்றுத் தர வகுதி இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு I தரம் I** |
| | இல்லை | பிரதான விலை மதிப்பீட்டாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனத்தினால் நடாத்தப் படும் ஆற்றல் ஊக்குவிப்பு மட்டம் - 1 - பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்.<br><br>3 ஆவது வினைத்திறன்காண் தடை<br>(இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடை முறைக்கு வரும் I/I தரத்தில் 5 வருட சேவைக் காலத்தை (பழையசேவைப் பிரமாணக் குறிப்பில் வகுப்பு I/II சேவைக் காலமும் உள்ளடங்களாக) பூரணப்படுத்தியுள்ள உத்தி யோகத்தர்கள் மூன்றாவது வினைத்திறன் காண் தடைதாண்டலை பூரணப்படுத்தியுள்ள வர்களாக கருதப்படுவர். இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதியில் ஏற்புடைய வினைத்திறன்காண் தடை தாண்டலில் சித்தியெய்துவதற்கு தவறிய உத்தியோகத்தர்களுக்கு இந்த வினைத்திறன் காண் தடைதாண்டலை சித்தியெய்துவதற்கு சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதியிலிருந்து 5 வருட சலுகைக் காலம் வழங்கப்படும்) |

10-420